கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இங்கே நிலக்கரி கிடைக்கிறதா என்பது பரிசீலனையில் இருக்கிறது. அங்கே இரும்பு இருக்கிறதா என்பதைப் பற்றி பரிசீலனை கூட ஆரம்பிக்கவில்லை. இதை எல்லாம் வைத்துக் கொண்டு வெளி நாட்டிற்கு அனுப்பிப் பரிசீலனை செய்தால் என்ன பலன் கிடைக்கும் ?

திரு. இரா. நெடுஞ்செழியன் : செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நிலக்கரிப் படிவங்களை ஆராய்ச்சி செய்திருக்கிற ஆராய்ச்சியாளர்கள், இதுவரை அரசாங்கத்திற்கு ஏதாவது அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்களா ? அப்படியானால், அது சபை முன் வைக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முன்பு எல்லாம் ஒரு நியதி உண்டு. ஜியாலாஜிகல் சர்வே ஒரு இடத்தில் கனிப் பொருள் இருக்கிறது என்று கண்டுபிடித்தால், அதை வெளியிலே சொல்லக்கூடாது. ஜியலாஜிகல் சர்வே ஆப் இந்தியாவுக்கு எழுதி அனுப்ப வேண்டும். அவர்கள் பரிசீலனை செய்து, கருப்பாக இருப்பதெல்லாம் நிலக்கரிதானா என்று கண்டுபிடிக்க வேண்டும். அதனுடைய காலோரிபிக் வேல்யூ என்ன என்று கண்டு பிடிக்க வேண்டும். கோக்கிங் தன்மை எப்படியிருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் நிலக்கரி இருக்கிறதா என்று சொல்ல வேண்டும். ஆனால் நம் நாட்டிலே கருப்பாக இருப்பதெல்லாம் இரும்பு என்றும், வெளளையாக இருப்பதெல்லாம் மைக்கா என்றும் நினைக்கக்கூடிய சம்பிரதாயம் இருந்துவருகிறது. இப்பொழுது திட்டமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. பரிசிலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : காஞ்சீபுரத்திற்குப் பக்கத்திலே நிலக்கரி இருப்பதாக அண்மையில் ஒரு செய்தியைப் பார்த்தோம். அது எந்த நிலையில் உள்ளது ? நிலக்கரிப் படிவங்கள் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பரிசீலனை முடிந்த பிறகுதான் எந்த விவரமும் கொடுக்க முடியும்.

English Language Teaching Campaign

*215 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have started an English Language Teaching Campaign in the State; and

(*b*) if so, whether there is any proposal to include this in the Training Schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) A number of training school teachers have already been trained under the Madras English Language Teaching Campaign. There is a proposal under consideration to train the remaining Training School teachers in the up-to-date methods of English teaching.

English in Elementary Schools

*216 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce English in the III Standard in Elementary schools from the next School year; and

13th March 1963]

(b) if so, the grade of teachers who will have to handle such classes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, the matter is under consideration.

(b) Secondary grade teachers will normally handle English classes.

அமைச்சரின் சுற்றுப்பயணம்

*217. கேள்வி—திரு. எஸ். முருகையன் : (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி சார்பாக) கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கனம் செய்தித் துறை அமைச்சர் 1962 டிசம்பர் மாதத்தில் பிரயாணம் செய்த மைல்கள் எவ்வளவு ? அது சம்பந்தமாக அவர் வாங்கிய அலவன்ஸ் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : During the period the Minister travelled 2,890 miles and drew a sum of Rs. 1,585.40 nP. towards travelling allowance and daily allowance.

Teachers (transfer)

* 218 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any Government Order directing that husband and wife serving as teachers in a village should not be separated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, the husband and wife should generally be posted in the same station. However, this is not to be construed as fettering the discretion of the authorities to transfer either the husband or the wife to another station for administrative reasons.

திரு. எஸ். மாதவன் : பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களை, பனிஷ்மெண்ட் கொடுப்பதற்காக, கணவன் மனைவியைப் பிரித்து வைப்பதாக ஒரு பாலிஸி இருக்கிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அப்படி செய்யக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கணவன், மனைவியைப் பிரித்துத் தான் பனிஷ்மெண்ட் கொடுக்கவேண்டும் என்பதில்லை. பனிஷ்மெண்ட் கொடுக்கும்பொழுது, சில சமயங்களில், கணவன் மனைவியைப் பிரித்து வைப்பது தவிர்க்க முடியாததாகப் போகிறது.

திரு. ஆ. துரையரசன் : அதிகாரிகளின் சொந்த விருப்பு வெறுப்பின் காரணமாக இதைப் போல் மாற்றப்படுவது பற்றி அரசினருக்குப் புகார்கள் வந்திருக்கின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு புகார்கள் வரவில்லை.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல் நடத்துவதற்காக இந்த மாதிரி தம்பதிகளைப் பிரித்து வைக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குடும்பக் கட்டுப்பாடு வேறு விஷயம். அதற்காகத் தம்பதிகளைப் பிரிப்பது பெரிய பாவம் என்று நான் சொல்லுவேன்.